[10th February 1958

* 25-B *Q*.—Sri P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Finance be pleased to state whether every village officer has been fixed a quota for getting collections for the National Small Savings Scheme?

The Hon. Sri C. SUBRAMANIAM : The Government have not fixed a quota for the village officers for getting collections for the Small Savings Scheme.

Sri N. K. PALANISAMI : இப்பொழுது கோரப்பட்டிருக்கிற டார்ஜெட்டில் கால்பாகம்கூட வசூல் ஆகவில்லை என்று தெரிகிறது. அதற்குக் காரணம் ஜனங்களிடம் உற்சாகம் மிகவும் குறைவாக இருப்பதனால்தான். ஆகவே ஜனங்களுக்கு உற்சாகம் உண்டாகக்கூடிய முறையில் ஒரு திட்டத்தை சர்க்கார் தொடங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : இந்த திட்டத்தில் கால்பங்கு கூட வசூல் ஆகவில்லை என்ற புள்ளி விவரம் கனம் அங்கத்தினர் தெரியாமல் சொல்லுகிறார்கள் என்று நம்புகிறேன். மக்களிடத்தில் உற்சாகம் நிறைய இருக்கிறது. ஆனால் அந்த உற்சாகத்தைக் குறைப்பதற்கு சில கட்சிகள் முயற்சி செய்து வருகின்றன. ஆகவே இந்தச் சேமிப்பு திட்டத்தின் மூலமாகத்தான் நமக்கு வேண்டிய மூலதன நிதியைத் திரட்ட முடியும். நமது அபிவிருத்தி திட்டமும் நமது ராஜ்யமும் முன்னேறவேண்டுமானால் நாம் எல்லோரும் கட்சிவேறுபாடின்றி இதில் முழுமனதுடன் ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER : Apart from the answer given by the Hon. Minister, I would like to request the hon. Members, whenever they put interpellations, not to give certain opinion or statement and then ask whether it is correct. That is not the way. The question-hour is intended for eliciting information and not for giving opinions.

9-10 a.m. Sri A. V. P. ASAITHAMBI : சிறு சேமிப்புத் திட்டத்தை அமல் நடத்தும்போது கட்டாயப்படுத்துவது கிடையாது என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால், விருத்தாசலம் போன்ற இடங்களில் கட்டாயமாக சிறு சேமிப்புத் திட்டத்திற்கு 15 ரூபாய் தரவேண்டுமென்று பள்ளிக்கூட மாணவர்களும் மாணவிகளும் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள் ; இது கனம் அமைச்சருக்குத் தெரியுமா ? அப்படியிருந்தால், இதைத் தடுப்பதற்கு கனம் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அந்த மாதிரியான புகார் எதுவும் எனக்கு வரவில்லை. அது உண்மையாக இருந்தால், அதை கனம் அங்கத்தினர் அவர்கள் எனக்கு எழுத்து மூலமாகத் தெரிவித்தால், அதை நான் கவனிக்கிறேன்.

Sri K. VINAYAKAM : Is it a fact that the target fixed for the City of Madras is two crores of rupees and that the Collector of Madras has already collected more than a crore and a half, that is, well within the fixed time?

Mr. SPEAKER : That is not a question. The hon. Member is giving information.

The Hon. Sri C. SUBRAMANIAM : That is a very relevant information.

10th February 1958]

SRI A. GOVINDASAMY : அந்த அந்த கிராமத்தில் வசூலாகும் நில வருமான வரிக்குத் தகுந்தபடி, சிறு சேமிப்பு நிதி அந்த அந்த கிராமத்தில் வசூலிக்கப்பட வேண்டுமென்ற காரணத்தால், நில வரிக்கும் பணம் கொடுக்கப்பட்டாலும் அது நிலவரிக்கு வைத்துக்கொள்ளப் படாமல், சிறு சேமிப்புக்கு வைத்துக்கொள்ளப்படுகிறது என்பது அரசாங் கத்துக்குத் தெரியுமா ? இதை அரசாங்கத்தார் தடுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த மாதிரியான தகவல் எனக்கு வரவில்லை.

Tuberculosis Sanatorium at Sevoor near Katpadi

* 4 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Collector, North Arcot, collected donations a few years ago from the public for the opening of a Tuberculosis Sanatorium at Sevoor near Katpadi; and

(*b*) if so, the reasons for the delay in opening the Sanatorium?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The delay was partly due to the delay in deciding on the location of the Sanatorium and partly because the Hony. Joint Secretary of the Tuberculosis Association was involved in a case of alleged misappropriation of tender money.

SRI A. A. RASHEED : When will this sanatorium be opened? How long will it take?

THE HON. SRI M. A. MANICKAVELU : I cannot say when. But steps are being taken to expedite the opening of the sanatorium.

'Tacco' metres in Government motor vehicles

* 5 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to instal "Tacco" metres in all Government motor vehicles?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

SRI N. K. PALANISAMI: டாக்கோமீடரின் மூலம் குறிப்பிட்ட பஸ்ஸோ, ஜீப்போ எவ்வளவு தூரம் போயிருக்கிறது என்று கணக்கெடுக்க முடியும் ; இப்போது ஆகும் செலவைக் குறைப்பதற்காக அந்த மீட்டரை ஏன் சர்க்கார் பஸ்களில் வைக்கக்கூடாது ?

THE HON. SRI R. VENKATARAMAN : 'டாக்கோக்ராப்' மூலமாக வண்டி எந்த நேரத்தில் எந்த வேகத்தில் போயிருக்கிறது என்று கணக் கெடுக்கலாம். ஆனால், சென்னை நகரத்தில் சர்க்கார் பஸ் வண்டி புறப்படும் நேரம், அது முக்கியமான இடங்களில் வந்துசேரும் நேரம், இறுதியாக சேரு மிடத்திற்கு வந்து சேரும் நேரம் ஆகியவைகளை நிர்ணயித்திருப்பதால், 'டாக்கோக்ராப்' மூலம் இங்கே அதிகமான பலன் கிடைத்துவிடாது.